பக்கங்கள் 13+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 12 புதன்கிழமை 27.11.2024 | அதிர்வு 118

## மாவீரரை அஞ்சலிக்க தமிழர் தாயகம் தயார்



தமிழீழத்துக்காகப் போராடி வீரச்சாவடைந்த மறவர்களை – மாவீரர்களை – காவிய நாயகர்களை தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் பூசிக்கும் மாவீரர் நாள் இன்றாகும். 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அடைமழையால் வெள்ளக்காடானது வடக்கு மாகாணம்!

## இதுவரை 90 ஆயிரத்து 821 பேர் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பொழியும் அடைமழை காரணமாக 28 ஆயிரத்து 143 குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரத்து 821 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 460 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 816 பேர் பாதிப்படைந்துள்ளனர். 29 இடைத்தங்கல் முகாம்களில் 571 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 954 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 272 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 287 பேர் பாதிப்படைந்துள்ளனர். 61 பாடசாலைகளில் 377 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 266 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 03

# காரைதீவில் வெள்ளத்தில் சிக்கியோரில் இருவர் இன்று காலை சடலங்களாக மீட்பு

## ஏனையோரைத் தேடும் பணி தொடர்கின்றது





(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், காரைதீவு – மாவடிப்பள்ளியில் வெள்ளத்தில் சிக்குண்டவர்களில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். காணாமல்போன ஏனையோரைத் தேடும் பணி தொடர்கின்றது.

காரைதீவு – மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கிக் காணாமல்போயிருந்த 03

# திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆயிரத்து 851 பேர் பாதிப்பு!




(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 1,708 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 851 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 182 உறுப்பினர்கள் பாதுகாப்பு மையங்களிலும், 532 குடும்பங்களைச் சேர்ந்த 1621 பேர் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “திருகோணமலை மாவட்டத்தில் இன்று புதன்கிழமை காலை பெறப்பட்ட புள்ளிவிபரத் தகவலின்படி சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும், மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 938 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 574 பேரும், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 96 குடும்பங்களைச் சேர்ந்த 301 பேரும், மொரவெவ பிரதேச செயலகப் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேரும், பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 193 குடும்பங்களைச் சேர்ந்த 673 பேரும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 403 குடும்பங்களைச் சேர்ந்த 1,084 பேரும், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, 6 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 34 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் சண்பகவல்லி வித்தியாலயத்திலும், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 9 குடும்பங்களைச் சேர்ந்த 26 பேர் சித்திவிநாயகர் வித்தியாலயத்திலும், பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள 22 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் பாரதிபுரம் பாடசாலையிலும், முத்துநகர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திலும் தங்க வைக்கப்பட்டு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.” – என்றார்.

# யாழில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க முன்வருவோருக்கான பொறிமுறை உருவாக்கம்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போதைய வெள்ள அனர்த்தம் தொடர்பான கந்துரையாடல் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர்,

“வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி வழங்க முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக உதவிப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும்.

இதற்காகப் பிரதேச செயலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பில் உதவிப் பொருட்கள் உரிய நபருக்கு உரிய நேரத்தில் வழக்கப்படடும் என்பதனை பிரதேச செயலாளர்கள் உறுதிப் படுத்திக் கொள்வதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்திலும் இதற்கான தனி அலகு உருவாக்கப்பட்டுள்ளது. உணவு அல்லது உணவு அல்லாத பொருட்களை வழங்கலாம்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரதம கணக்காளர் பொறுப்பாகவிருந்து வழங்கப்பட்ட உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடன் உரிய உதவிப் பொருட்கள் பிரதேச செயலகங்களாலும், மாவட்ட செயலகத்தாலும் வழங்கப்படும்.” – என்றார்.

இதன்போது அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை அரச அதிபர் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்






**காரைதீவில்...**

நிலையில் நேற்று மாலை மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மற்றும் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

இருள் இரவு சூழ்ந்திருந்த போதிலும் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கை இன்று காலையும் தொடர்ந்தும் இடம் பெற்று வந்தது. அதன்போது இரண்டு சடலங்கள் மீட்புப் பணியாளர்களினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவன் பாரூக் முஹம்மட் நாஸிக் (வயது 15) என்பவரும், இன்னுமொரு அடையாளம் தெரியாத ஒருவருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணியாளர்களினால் வெள்ளத்தில் காணாமல்போனவர்களைத் தொடர்ந்தும் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

மீட்புப் பணியின்போது விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன் இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல்போனார்கள் என்பதைத் துல்லியமாகக் கூற முடியாத நிலை உள்ளது என்றும், குறைந்தது இன்னும் 5 அல்லது 6 பேராவது வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றிருக்கலாம் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் காரியாலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று காலை அம்பாறை மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர், காரைதீவு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர்கள், கல்முனை மாநகர ஆணையாளர், கணக்காளர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து துரிதல் கதியில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஸ்தலத்துக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. தாஹீர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் குறித்த மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

---

**மாவீரரை...**

கொட்டும் மழைக்கு மத்தியிலும், இயற்கை இடர்பாடுகளைத் தாண்டியும் இன்றைய நாளில் மாவீரர்களை அஞ்சலிப்பதற்குத் தமிழர் தாயகம் தயாராகியுள்ளது.

தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தேசத்தின் விடுதலையை அதியுன்னதமாக நேசித்து அந்த உயரிய லட்சியத்துக்காக சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களைப் போற்றி வணங்கும் தூய்மையான நாள் இன்று.

இன்றைய நாள், ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரி நட்சத்திரங்களாக தம்மை மாற்றிக்கொண்டவர்களை நினைந்துருகும் நாள். தமிழினத்தின் இருப்புக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை தமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நிறுத்தி தமிழர்கள் நினைவுகூரும் நாள். தமிழர் தாயகம் சுதந்திரத் தாகம் கொண்டு எழுச்சிகொள்ளும் மகத்தான நாள். தமிழர் தாயகத்தின் விடிவுக்காகவும் தமிழர் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய வீரர்களை தமிழர்கள் தங்களின் இதயக் கோவில்களில் நிறுத்தி பூசிக்கும் நாள்.

எதனையும் தாங்கும் இதயத்துடன் சாவுக்கு அஞ்சாத வீரத்துடன் சாவைத் தழுவியவர்கள்தான் மாவீரர்கள். அவர்களின் துயிலுல் இல்லங்கள் தாயகத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அல்லது சீரழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தரைமட்டமாக்கப்பட்ட துயிலும் இல்லங்களின் எச்சங்களை மீட்டெடுத்து இன்றைய மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தாயக தேசம் தயாராகியுள்ளது.

வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. மாவீரர் அலங்கார வளைவுகள் மிடுக்குடன் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம், உடுத்துறை, சாட்டி ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் ஏற்பாடுகள் முழுமையடைந்துள்ளன. இதனை விடவும், நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு அமைந்துள்ள நினைவாலயத்தில் மாவீரர்நாள் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், ஏராவில் மாவீரர் துயிலும் இல்லம் ஆகிய வற்றிலும் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவுக் கடற்கரை, இரட்டை வாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அலம்பில், வன்னிவிளான்குளம்,முள்ளியவளை,ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளிலுல் அமைந்துள்ள மாவீரர் நினைவாலயங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

அதேபோல் வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவாலயங்கள், மாவீரர் நினைவிடங்களில் மாவீரர்நாள் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இன்று மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட சமநேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

---

**அடைமழையால்...**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 104 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 374 பேர் பாதிப்படைந்துள்ளனர். 4 இடைத்தங்கல் முகாம்களில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 520 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 205குடும்பங்களைச்சேர்ந்த52ஆயிரத்து 487 பேர் பாதிப்படைந்துள்ளனர். 43 இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 128 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 457 குடும்பங்களைச் சேர்ந்த 867 பேர் பாதிப்படைந்துள்ளனர். 3 இடைத்தங்கல் முகாம்களில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 202 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய வடக்கில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 28 ஆயிரத்து 143 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 821 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 290 இடைத்தங்கல் முகாம்களில் 2 ஆயிரத்து 384 குடும்பங்களைச் சேரந்த 8 ஆயிரத்து 70 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் மாவட்ட செயலாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.



# ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 876 பேர் அம்பாறை மாவட்டத்தில் பாதிப்பு!

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் இங்கினியாகலை பிரதேசத்தில் 240.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளது.

மகாஓயா பிரதேசத்தில் 132.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட வானிலை அவதானிப்பாளர் எம்.ஏ.எம்.அக்மல் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இம்மாவட்டத்தில் பிரதான வீதிகள் சில மழை நீரால் நிரம்பியுள்ளது. பாலமொன்று உடைப் பெடுத்தமையாலும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. நிந்தவூர் மாட்டுப்பளை பகுதியில் பாலமொன்று உடைப்பெடுத்தமையால் கல்முனை- அக்கரைப்பற்று போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை–கண்டி வீதி, அம்பாறை–கல்முனை பிரதான வீதிகளின் போக்குவரத்தும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளன. தாழ்நிலப் பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். உறவினர்கள் இல்லங்களுக்கும், பாடசாலைகள், மத நிறுவனங்கள் போன்றவற்றில் பலர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் 34 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 23 மூவாயிரத்து 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 52 நலன்புரி நிலையங்களில் 2082 குடும்பங்களைச் சேர்ந்த 6710 பேர் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுவரை இம்மாவட்டத்தில் 70 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக இந்த மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக் கணக்கான விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. இம்மாவட்டத்தின் நெற் செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கை போன்ற வற்றுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தமது மீன்பிடி படகுகள் வள்ளங்கள் போன்றவற்றை கடற்கரையிலிருந்து வெகு தொலைவுக்கு அப்புறப்படுத்தி கரையொதுக்கி வைத்துள்ளனர். இதற்கென மீனவர்கள் கனரக இயந்திரங்களின் உதவியுடன் கடற்றொழில் உபகரணங்கள் கரையொதுக்கப்பட்டு வருகின்றன. கடல் அலைகளின் வீரியம் இம்மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுவதால் சில பிரதேசங்களில் கடல் நீர் கரைப் பகுதிகளுக்கு ஊடுருவியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் முதலைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் விஷ ஜந்துக்கள் போன்றன மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்தமையால் மக்கள் அச்ச நிலையை அடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் வெள்ள நிலைமைகளில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம உள்ளிட்ட மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள், முப்படையினர், துறைசார் முக்கியஸ்தர்கள் பொது அமைப்பைச் சேர்ந்தவர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் போன்றோர் மக்கள் நல சேவையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் மேலும் தெரிவித்தார்.







# கிழக்கு மாகாண அனர்த்தம் ஆராய ஆளுநர் கலந்துரையாடல்

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய அனர்த்த நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கென இன்று (27) மாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த 23 ஆம் திகதி முதல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் திருகோணமலை, மட்டக் களப்பு,அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் மற்றும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்,அதற்கு எடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பில் இந்த அவசர கலந்துரையாடலில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மாகாண வீதிப்போக்குவரத்து அமைச்சின் செயலாளர், திருகோணமலை மாவட்ட அரச அதிபர், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை அதிகாரி, சுகாதாரத்திணைக்கள மாகாணப் பணிப்பாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# சீரற்ற காலநிலை காரணமாக ஒலுவில் கலியோடை பாலம் சேதம்

**(நவாஸ்)**

அக்கரைப்பற்று கல்முனை வீதியில் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

களியோடை பாலத்துக்கு அருகில் உள்ள அட்டப்பள்ள பாலம் தாழ் இறங்கியுள்ளது.

இதனால், வாகனங்கள் இந்தப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்து செய்ய முடியாத நிலை இன்று (27) ஏற்பட்டுள்ளது.

பாதையின் அக்கரைப்பற்று பக்கம் இருந்து வருபவர்கள் கல்முனை செல்லும் பக்கமும் கல்முனை பக்கம் இருந்து வருபவர்கள் அக்கரைப்பற்று செல்லும் பக்கமும் கால் நடையாக பாலத்தை கடந்து செல்கின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மாவீரரைப் போற்றுதல்

ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் நீக்கமற நிறைந்திருக்கும் மாவீரர் தினத்தின் உணர்வெழுச்சியை அனுஷ்டிப்பதற்கான அரசியல் களச்சூழ்நிலை இந்த வருடம் தலைகீழாக மாறி இருக்கின்றது.

அதேபோல, அதனை அனுஷ்டிப்பதற்கான காலநிலைச் சூழலும் கூட இம்முறை வழமைக்கு மாறாக மிக மோசமாக அமைந்துவிட்டது.

யுத்தம் முடிந்த இந்தப் பதினைந்து ஆண்டு காலத்தில் தமிழர் தாயகத்தில் மாவீரர் வாரத்தை தமிழ் மக்கள் சுய எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு இடமளிக்காமல் பௌத்த - சிங்கள பேரினவாத அரசுகளின் காவல் பிரிவுகளும் ஏவல் படைகளும் கெடுபிடி பண்ணி வந்தன.

இந்தத் தடவை கொழும்பில் ஆட்சி மாற்றத்தோடு அந்த நெருக்குவாரம் குறைய, அந்தக் கெடுபிடி இடத்தை இயற்கை சீற்றம் தனது கைக்குள் கொண்டு வந்து விட்டது.

'நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணி' என்பது போல ஈழத் தமிழர்களுக்கு மாவீரர் தின அனுஷ்டிப்பு என்பது - அதற்கான தமது உரித்தை அவர்கள் பயன்படுத்துவது என்பது - எப்போதும் நெருக்கடியும் இக்கட்டும் நிறைந்ததுதான் போலும். இம்முறை அவர்களுக்கு எதிராக இயற்கையே பேயுருக் கொண்டு நிற்கின்றது.

இன்றைய மாவீரர் தின உணர்வெழுச்சியை தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வெளிப்படுத்துவதற்குக் குந்தகமாக இயற்கை சீற்றம் பேரிடராக வந்து பெருங்குழப்பம் பண்ணி நிற்கின்றது.

ஆயினும் கூட, தமிழ் மக்கள் ஆங்காங்கே தங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி இன்றைய தினத்தில் தமக்காக - தங்கள் இனத்துக்காக- தங்கள் இனத்தின் இருப்புக்காக - தம்முயிரை ஈகம் செய்த தமது இனத்தின் மாவீரர்களை - தற்கொடையாளர்களை - ஒப்பற்ற புதல்வர்களை - உணர்வெழுச்சியுடன் அஞ்சலித்து போற்றத் தவறவில்லை.

இன்றைய மாவீரர் தினத்தில் அந்த பெருந்தகைகளுக்கு நாம் செய்யக்கூடிய அஞ்சலியை, இப்போதைய இயற்கைச் சீற்றப் பேரிடரில் பாதிப்புற்ற நம் சகோதரர்களுக்கு - நமது மக்களுக்கு - இயன்ற வகையில் உதவுவதன் மூலம் நாம் ஆற்ற முடியும்.

அடக்கு முறையால் ஏதிலிகளான நமது இனச் சகோதரர்களுக்கு பாதுகாப்புக் கவசத்தை வழங்குவதற்காகவே மாவீரர்கள் தங்கள் உயிரைத் துச்சம் என மதித்து அதனை விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியாக்கினார்கள்.

அது போன்ற ஈகத்தை எமது இனத்துக்கு நாம் ஆற்ற முடியாவிட்டாலும், இங்கு இப்போது இயற்கைச் சீற்றப் பேரிடரினால் ஏதிலிகளான நம் சகோதரர்களுக்கு இயன்ற வகையில் உதவுவதன் மூலம் நாமும் அவர்களைப் போலவே இனத்துக்காகக் கடமையாற்றி - சமூகப் பணியாற்றி - அவர்களை, அந்த மாவீரர்களை, நாம் அஞ்சலிக்க முடியும்.

இயற்கைப் பேரிடரில் சிக்கி இன்று அந்தரித்துக் கொண்டிருக்கும் நமது சகோதரர்களுக்கு - நமது இன மக்களுக்கு - நம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதும் அந்த மாவீர ஆன்மாக்களுக்கு நாம் செய்யக்கூடிய அஞ்சலிதான். உண்மையான காணிக்கைதான்.

இந்தக் கடும் மழை, வெள்ளம், மோசமான வானிலை என்ற இயற்கைப் பேரிடர்களுக்கு மத்தியிலும் மாவீரர் தின எழுச்சியை உணர்வோடு அனுஷ்டிப்பது என்பதில் அந்த மாவீரர்கள் போற்றிய நம் இன மக்களுக்காக நாம் உண்மை நெஞ்சத்துடன் நேர்மையாக உழைப்பதும் அடங்கும்.

அதைப் புரிந்து கொண்டு, இன்றைய மாவீரர்தினஉணர்ச்சிஅனுஷ்டிப்புகளை கொஞ்சம் ஆரவாரம் குறைத்து, இயற்கைச் சீற்றத்தால் பாதிப்புற்ற நமது மக்களுக்கு உதவும் திசையில் அதனை நாம் திருப்புவது சமூகப் பிரக்ஞை கொண்ட அணுகுமுறையாக அமையும்.

பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவது மகேசன் சேவை. அதையே மாவீரர்களின் ஆன்மாக்களும் முழு மனதோடு வரவேற்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



# மன்னார் தற்காலிக நலன்புரி நிலையத்துக்கு விஜயம் செய்தார் பாதுகாப்பு பிரதி அமைச்சர்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 52 ஆயிரத்தை கடந்தது. இந்த நிலையில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி நிலையத்துக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் தொடர் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இன்று புதன்கிழமை (27) காலை வரை 15 ஆயிரத்து 205 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 487 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 128 நபர்கள் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 43 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையிலான குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டதோடு, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன் போது பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகளும் சென்றிருந்தனர்.










# வெள்ள நீரை வழிந்தோட விடுவது தொடர்பில் பிரதேச சபைச் செயலாளர்களுடன் சந்திப்பு

## இம்ரான் எம்.பி. இன்று மேற்கொண்டார்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாப் பெய்து வரும் அடை மழையால் தாழ்நில பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப் படைந்துள்ளது.

மக்களின் வீடுகளிலும் பாதைகளிலும் தேங்கி உள்ள நீரை விரைவாக வடிந்தோட செய்வதற்காக எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாகத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபுக்கும் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை செயலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (26) இடம்பெற்றது.

வெள்ள நீரை விரைவாக வடிந்தோட செய்யத் தேவைப்படும் கனரக இயந்திரங்களைத் தனியாரிடம் இருந்து பெறுதல், பிரதேச சபை ஊழியர்களுக்கு மேலதிகமாக பொது மக்களின் பங்களிப்பை பெறுவது மற்றும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.









# மன்னாரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக சென்று உதவும் செல்வம்!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக இதுவரை 14 ஆயிரத்து 237 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 560 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் 2100 நபர்கள்வரை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களையும் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களையும் அதிகாரிகள் பார்வையிட்டு உதவிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உதவிகளை முன்னெடுத்து வருகின்றார்.

அவருடன் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தனும் சென்று அவசர உதவிகளை முன்னெடுத்து வருகின்றார்.

சமைத்த உணவு , உலர் உணவு பொருள்கள், குழந்தைகளுக்கான பால் மா மற்றும் தேவை அறிந்து நுளம்பு வலைகளையும் வழங்கி வரு கிறார்.

பாதிப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்ற மையால் அரசின் உதவிகள் உரிய முறையில் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையாத நிலை காணப்பட்து.தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத் தில் பாதிப்புகள் மற்றும் மக்களின் இடப்பெயர்வுகள் அதிகரித்து காணப் படுகின்றது.

மன்னார் மாவட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இடர்கால நிலையை கருத்தில் கொண்டு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தில் அசமந்த போக்குடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் மன்னாரை போன்று வவுனியா மற்றும் முல்லைத்தீவிலும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எனவே வன்னி மாவட்டத்தில் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டமையால் ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித கதியில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.










Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# பூண்டுலோயா செல்லும் வீதியில் சரிந்து வீழ்ந்தது மண்மேடு!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா - டன்சினன் ஊடாக பூண்டுலோயா செல்லும் வீதியில் டன்சினன் பகுதியில் இன்று (27) காலை மண்மேடு சரிந்து வீழ்ந்தது.

இதன் காரணமாக போக்குவரத்து தடைப்பட்டது என்று பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் வீழ்ந்துள்ள மண்மேடுகளை பெக்ஹோ இயந்திரங்களைப் பயன்படுத்தி விரைவாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என பூண்டுலோயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# நாடாளுமன்றத்தில் இன்று அமளி; இரு அவைகளும் ஒத்திவைப்பு

கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரத்தை விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டன.

தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று காலை 11 மணிக்கு கூடின. மக்களவை கூடியதும், பா.ஜ.கவைச் சேர்ந்த மீரட் தொகுதி உறுப்பினர் அருண் கோவில், சமூக ஊடகங்கள் மற்றும் ஓ.டி.டி. தளங்களில் ஆபாச காட்சிகள் இருப்பதாகவும், குடும்பத்தோடு பார்க்க தகாததாக அவை இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இதனை கட்டுப்படுத்த கடுமையான சட்டம் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். இவ்விஷயத்தில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது என அருண் கோவில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்,



“உறுப்பினர் அருண் கோவில் மிக முக்கிய கேள்வியை எழுப்பி இருக்கிறார். சமூக ஊடகங்கள் சில நாடுகளில் இருந்து இயக்கப்படுகின்றன. அந்த நாடுகள் வேறு வகையான கலாச்சாரத்தைக் கொண்டிருக்கின்றன. இதேபோல், ஓ.டி.டி. தளங்களிலும் ஆபாசம் இருக்கிறது. நமது கலாச்சாரம் மற்றும் சமூகத்தின் நன்மை கருதி இது தொடர்பாக சட்டம் இயற்றப்படும். அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் அரசுக்கு தேவை” என பதில் அளித்தார்.

இதனிடையே, கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.

கேள்வி நேரம் முக்கியமானது என்றும், உறுப்பினர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்றும் சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார். உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். எனினும், அவையில் தொடர்ந்து கூச்சல் குழப்பம் நிலவியதை அடுத்து முதலில் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

12 மணிக்கு அவை மீண்டும் கூடியதும் எதிர்க்கட்சிகள் மீண்டும் அமளியில் ஈடுபட்டன. சபாநாயகரின் இருக்கைக்கு அருகே வந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதே விவகாரம் மாநிலங்களவையிலும் எழுப்பப்பட்டது. அப்போது பேசிய அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர், அதானி விவகாரம், டில்லியில் நடந்த குற்றங்கள், மணிப்பூர் வன்முறை, சம்பால் வன்முறை என 18 பிரச்சினைகள் தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும், இந்த அவைக்கு என்று பாரம்பரியம் உள்ளது. எனவே, அந்த பாரம்பரியப்படி அவை நடத்தப்படும் என ஜக்தீப் தன்கர் கூறினார்.

இதை ஏற்க மறுத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து முதலில் 11.30 மணி வரை அவையை அவைத் தலைவர் ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடியதும், மீண்டும் அமளி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

# தமிழகத்தில் சமூகநீதியை மறுக்கிறது தி.மு.க அரசு

## ராமதாஸ் குற்றச்சாட்டு



“தமிழகத்துக்குள் சமூகநீதியை நுழைய விட மறுக்கிறது தி.மு.க. அரசு. தெலுங்கானாவில் 20 முதல் 25 நாள்களில் நடத்தி முடிக்கப்படும் சாதிவாரி மக்கள்தொகை கணகெடுப்பை தமிழகத்தில் நடத்த முடியாதா? அதற்கான மனிதவளம் தமிழகத்தில் இல்லையா? அதற்கான நிதி தமிழகத்தில் இல்லையா? எல்லாம் இருக்கிறது. ஆனால், ஆட்சியாளர்களுக்கு சமூகநீதி வழங்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான் இல்லை.”

– இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் சாடியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தெலுங்கானாவில் கடந்த 6 ஆம் திகதி தொடங்கிய சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு கடந்த 20 நாள்களில் 92 வீதம் நிறைவடைந்து விட்டதாக அம்மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி கூறியிருக்கிறார். தெலுங்கானா மாநிலத்தில் சமூகநீதியைக் காப்பதில் அம்மாநில காங்கிரஸ் அரசு காட்டும் அக்கறை வரவேற்கத்தக்கது. தெலுங்கானா மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் சாதிவாரி கணக்கெடுப்புப் பணிகள் அடுத்த ஒரு வாரத்தில் முடிவடைந்துவிடும். டிசம்பர் 9 ஆம் திகதி அதன் அறிக்கை அம்மாநில அரசிடம் தாக்கல் செய்யப்படவுள்ளது. அதனடிப்படையில் அனைத்து சமூகங்களுக்கும் முழுமையான சமூகநீதி வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி கூறியிருக்கிறார்.

தெலுங்கானாவில் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு சமூகநீதி நிர்வாகத்தில் வரலாற்றுச் சாதனை என்றும், மாநிலங்களில் சமூகநீதி வழங்க இது அவசியம் என்றும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கூறியிருக்கிறார்.

தெலுங்கானாவில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள்தொகை வெறும் 52 வீதம் மட்டும் தான். ஆனால், அவர்களுக்காக சமூகநீதியை வழங்க வேண்டும் என்பதற்காக அம்மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வியக்க வைக்கின்றன. சமூகநீதியில் தெலங்கானா வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தெலுங்கானாவுக்கு மிக அருகில் தான் தமிழகம் என்ற மாநிலமும் உள்ளது. அதற்கு சமூகநீதியின் தொட்டில் என்று பெயர். தமிழகத்தில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள்தொகை 69.10 வீதம் . ஆனால், அங்கு அவர்களுக்கு சமூகநீதி வழங்கப்படுவதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. அதற்காக மாநில அளவில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றால் அதற்கான அதிகாரம் தங்களுக்கு இல்லை என்று தட்டிக்கழிக்கிறது தமிழகத்தை ஆட்சி செய்யும் சமூக அநீதி அரசு. மொத்தத்தில் தமிழகத்துக்குள் சமூகநீதியை நுழைய விட மறுக்கிறது தி.மு.க. அரசு.

தமிழகத்தை தற்போது ஆளும் அரசால் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாது, சமூகநீதி வழங்கப்படாது என்பதை தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். சமூக நீதிக்கு இந்த அளவுக்கு துரோகம் செய்யும் தமிழகத்தின் அரசை சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்கின் ஆன்மா ஒருபோதும் மன்னிக்காது. அடுத்து அமையவிருக்கும் பா.ம.க. அங்கம் வகிக்கும் ஆட்சியில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும். அனைத்து மக்களுக்கும் முழுமையான சமூகநீதி வழங்கப்படும். இது உறுதி.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# லெபனானில் முடிவுக்கு வந்த மோதல்: இஸ்ரேல் - ஹிஸ்புல்லா போர் நிறுத்தம்

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் இலங்கை நேரப்படி இன்று காலை 7.30 மணி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான லெபனானில் ஓராண்டுக்கும் மேலாக இருதரப்புக்கும் இடையே நீடித்து வந்த மோதல் முடிவுக்கு வந்துள்ளது.

இதன் பலனாக லெபனான் நாட்டில் முகாமிட்டுள்ள இஸ்ரேல் படைகள், படிப்படியாக வெளியேறும் என்றும், மீண்டும் ஹிஸ்புல்லா அமைப்பின் மறுகட்டமைப்பை தடுக்கும் வகையில் அந்த நாட்டின் தெற்கு பகுதி பாதுகாப்பினை ராணுவம் உறுதி செய்யும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில் லெபனான் நாட்டு இராணுவம் தெற்கு பகுதிக்கு செல்லவும், ஐ.நா-வின் 1701 தீர்மானத்தின் கீழ் அதன் பணியை மேற்கொள்ள தயாராகி வருவதாக கூறியுள்ளது.

போர் நிறுத்தம் காரணமாக தெற்கு லெபனான் பகுதியை சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர். கார்கள் அந்த நாட்டின் தெற்கு பகுதியை நோக்கி அணிவகுத்தவாறு உள்ளன. இருப்பினும் எல்லை பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் இஸ்ரேல் படைகள் உள்ளனர். அந்த கிராமங்களுக்கு மக்கள் திரும்ப முடியாத சூழல் நிலவுகிறது.

இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்தத்தை ஈரான் உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்றுள்ளன. அதே நேரத்தில் அமெரிக்காவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம் இதில் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரியவில்லை என்று சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா மீறி செயல்பட்டால் தகுந்த பதிலடி கொடுப்போம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.





# மெக்சிகோ, சீன பொருள்களின் இறக்குமதிக்கு கூடுதல் வரி

## டொனால்ட் ட்ரம்ப் திட்டம்




மெக்சிகோ, சீனா, கனடா ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக வரி விதிக்க டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவியேற்க உள்ளார். இந்த நிலையில், மெக்சிகோ மற்றும் கனடா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு தலா 25 சதவீதமும், சீனாவின் இறக்குமதிக்கு 10 சதவீதமும் கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது.

ட்ரம்ப் தனது தேர்தல் பிரச்சாரங்களில், அமெரிக்கா உடன் இந்தியா மிகப் பெரிய வர்த்தக துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாக குற்றம்சாட்டிய நிலையில், இந்த வரி விதிப்பு குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

இதன் மூலம், உற்பத்தி துறைக்கான வேலைவாய்ப்புகளை மீண்டும் அமெரிக்காவுக்கே திரும்ப கொண்டு வரவும், வர்த்தக பேரங்களை அதிகரிக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது.

அமெரிக்காவிற்கு சுமார் 5.7 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருள்களை சுங்க வரி இல்லாமல் ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் இந்தியா ஏற்றுமதி செய்து மிகப்பெரும் பலனை அடைந்து வந்தது. ஆனால், கடந்த 2019 ஆம் ஆண்டில் இந்த அந்தஸ்த்தை இந்தியா இழந்தது.

இதனிடையே, அமெரிக்காவுக்கு பெருமளவிலான போதைப் பொருள்கள் குறிப்பாக, செயற்கை ஓபியாய்டு ஃபென்டானில் என்ற போதைப் பொருள் மெக்சிகோ வழியாக அமெரிக்காவுக்கு கடத்தப்படுவதாக புகார் உள்ளது.

இதுதொடர்பாக பலமுறை எச்சரித்தும் சீன அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். எனவே, போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் வரை சீன இறக்குமதிக்கு கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கனடா முரசு
புதன்கிழமை 27/11/2024

## கனடாவில் குரங்கம்மை நோய் தொற்று பதிவு

கனடாவில் முதல் குரங்கமை நோய் பதிவாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பொது சுகாதார முகவர் நிறுவனம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்

02





# கனடா மீது வரி விதிக்கவுள்ளார் ட்ரம்ப்; அவசர கூட்டத்துக்கு ட்ரூடோ அழைப்பு

**அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ட்ரம்ப், தான் பதவி யேற்றதும் முதலாவதாக கனடா உள்ளிட்ட சில நாடுகள் மீது வரி விதிக்க இருப்பதாக அறிவித்துள்ளார்.**

**அந்த விடயம் பல நாடுகளை பரபரப்படையச் செய்துள்ளது.**

**இந்நிலையில், கனடா மீது வரி விதிக்க இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ள விவகாரம் தொடர்பில், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

சமூக ஊடகம் ஒன்றில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக பதவியேற்றதும், கையெழுத்திடும் முதல் ஆவணங்களில் ஒன்று, கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது தொடர்பானதுதான் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் போதைப்பொருள்களையும், புலம்பெயர்ந்தோரையும் கனடா, மெக்சிகோ போன்ற நாடுகள் கட்டுப்படுத்தும்வரை இந்த வரிவிதிப்பு அமுலில் இருக்கும் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாகவே, கனடா பிரதமர் ட்ரூடோ கனடா மாகாணங்களின் பிரீமியர்களுடன் அவசர கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# இசை நிகழ்ச்சியில் ட்ரூடோ நடனம் ஆடியதால் சர்ச்சை

கனடா மான்ட்ரியல் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இஸ்ரேலுக்கு எதிரான போராட்டம் வன்முறையாக மாறி வாகனங்களுக்கு தீவைப்பு மற்றும் உருவ பொம்மை எரிப்பு போன்ற சம்பவங்களும் நடந்தன.


இந்நிலையில் அதேநாளில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இன்னொரு பகுதியில் பிரபல பாடகி டெய்லர் ஸ்விப்ட்டின் கச்சேரியில் பங்கேற்று இசை நிகழ்ச்சியை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். இந்த இசை நிகழ்ச்சியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குடும்பத்துடன் கலந்துகொண்டார்.

அந்த நிகழ்ச்சியில் அவர் நடனமாடினார். இது தொடர்பான காணொலி மற்றும் மக்களுக்கு நட்பு பிரேஸ்லெட் வழங்கும் காணொலி சமூக வலைத் தளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மான்ட்ரியல் நகரில் பதற்றமான சூழல் நிலவிவரும் சூழலில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பொறுப்பின்றி நடந்துகொள்கின்றார் என மக்கள் கொந்தளித்தனர்.அதோடு 'பழங்காலத்தில் ரோம் நகரம் பற்றி எரியும் போது நீரோ மன்னன் மேடையில் ஏறி கவிதை வாசித் தான்.

அதேபோன்று கனடாவின் கடனை 1.2 டிரில்லியன் டொலர்களாக இரட்டிப்பாக்கிவிட்டு, நாட்டின் எல்லைகளை திறந்து விடுவதன் மூலம் வீட்டுவசதி நெருக்கடியை உருவாக்கிய பிறகு டெய்லர் ஸ்விப்ட் கச்சேரியில் பிரதமர் ட்ரூடோ நடனமாடுகிறார்' என சமூகவலைத்தளத்தில் சிலர் விமர்சித்துள்ளனர்.

அதேவேளை ட்ரூடோ ஒரு தந்தையாக தன் மகளுடன் கச்சேரியில் இருக்கிறார், தவறாக எதுவும் நடக்கவில்லை என சிலர் தெரிவித்துள்ளனர்.





# நோவா ஸ்கோஷியாவில் இன்று இடைத் தேர்தல்

கனடாவின் மாகாணங்களில் ஒன்றான நோவா ஸ்கோஷியாவில் இன்று இடைத் தேர்தல் நடைபெறுகின்றது.

மாகாணத்தில் கடந்த நான்கு வாரங்களாக பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இரண்டாம் தடவை முதல்வர் பதவியை பெறும் நோக்கில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் ரிம் ஹூட்சன் முன்கூட்டியே தேர்தலை அறிவித்திருந்தார்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடைபெறவிருந்தது.

எனினும் ஏழு மாதங்கள் முன்கூட்டியே மாகாணத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டு இன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

இன்றைய தினம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையில் மக்கள் வாக்களிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கனடிய பல்கலைகளில் ஆள்குறைப்பு நடவடிக்கை

கனடிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆள்குறைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு மாணவர்களின் உள்ளீர்ப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைவினால் இவ்வாறு ஆட்குறைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

உயர் கல்வித்துறை நிறுவனங்கள் சிலவற்றில் இவ்வாறு ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் சில ஆட்குறைப்பு நடவடிக்கை தற்காலிகமானவை எனவும் சிலவை நிரந்தரமான ஆட்குறைப்பு நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்படுகிறது.




லிபரல் அரசாங்கம் வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதியை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது.கனடாவின் மானிட்டோபா பகுதியில் இவ்வாறு குரங்கம்மை நோயாளர் ஒருவர் பதிவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் பொது மக்களுக்கு இந்த நோய் தொற்று பரவக்கூடிய அபாயங்கள் குறைவு என அறிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு குரங்கமை நோயினால் பாதிக்கப்பட்டவர் வெளிநாட்டு பயணம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியவர் என தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் குரங்கமை நோயாளர்கள் அதிகம் பதிவாகின்றனர்.

மேற்படி நாடுகளிலிருந்து திரும்புவோர் கண்காணிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் குரங்கமை நோய் தாக்கம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# கனடாவில் பொலிஸார் மேற்கண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். விண்னிப்பிக் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகன தரிப்பிடம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபர் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்து பகுதியில் கத்தி குத்தி தாக்குதல் நடத்தியுள்ளார்.

எனினும் இந்த தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத் தருக்கு உயிர் ஆபத்து கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் உத்தியோகத்தர் மேற்படி சந்தேக நபரை துப்பாக்கியால் சுடும் காட்சிகள் அடங்கிய காணொலி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

இந்த காணொலியில் ஒட்டுமொத்த சம்பவமும் பதிவாகவில்லை எனவும் பொலிஸ் உத்தியோகத்தார் துப்பாக்கிச் சூடு நடத்தும் காட்சிகள் மட்டும் காணப் படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் மக்களின் உயிரை காவு கொள்ள விரும்புவதில்லை எனவும் சமூகத்தை பாதுகாப்பதே அவர்களின் முதன்மை கடமை எனவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

